மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, தற்போது இருப்பதைவிட பெரியார் மாவட்டத்திலேயும், கோவை மாவட்டத்திலேயும், காங்கயம், வெள்ளக்கோயில், பொங்களூர் ஆகிய மூன்று தொகுதிகளுக் குட்பட்ட சுமார் 34,000 ஏக்கருக்குக் கூடுதலாகப் பாசன வசதி செய்யக்கூடிய செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர் நிர்வாகக் கழகம்

***123 வினா.**—திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழகத்தில் நீர் நிர்வாகக் கழகம் ஒன்றினை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலிருக்கின்ற நீர்நிலைகளை நாம் முடிந்த அளவிற்குப் பயன்படுத்திவிட்டோம். எனவே இருக்கின்ற நீரைச் சிக்கனமாகச் சேர்த்து வைத்து எப்படி ஜாக்கிரதையாகப் பயன்படுத்துவது என்று அறிவுரை வழங்குவதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறதா ?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, ஐக்கிய அமெரிக்க நாட்டு உதவியுடன் தமிழகத்தின் பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை, மற்றும் ஏனைய துறை அலுவலர்களுக்கு பாசன நீர் நிர்வாகத்தில் பயிற்சி அளிக்க ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. Irrigation Management Training Institute என்ற பெயரில் துவக்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, வெள்ளக் காலங்களில் சில பகுதிகளிலே நீர் அதிகமாக வருகிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே கடைமடைப் பகுதிகளிலே ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வருகிறது. அங்கே வெள்ளத்தால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. தண்ணீரும் வீணாகிறது. அந்தப் பகுதியிலே வெள்ளத்தால் வரும் தண்ணீரைத் தேக்கி, பின்னாலே

அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்த முடியுமென்று வல்லுனர்கள் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, நமக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும், அந்த நீரை முறைப்படி பயன்படுத்தவும் ஏதாவது செயற்குறிப்பு, அதாவது நீர் நிர்வாகக் கழகம் என்று ஏற்படுத்த இல்லையென்றாலும், இனிமேலாவது அப்படி ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற பாதகத்திற்கு நீர் நிர்வாகக் குழு ஒன்றுதான் மாற்று என்று நான் கருதவில்லை. அதற்குப் பல்வேறு மாற்று ஏற்பாடுகள் இருக்கக் கூடும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற கருத்து அத்தகைய மாற்று ஏற்பாடுகளில் ஒன்றாக இருக்கக்கூடும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இருக்கக்கூடிய நிலங்களின் அமைப்பை எடுத்துக்கொண்டால், நீரைத் தேக்கி வைக்க நீர்த் தேக்கங்களை அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவரவர்களே, இன்ஸ்டிடியூட் அமைப்பது நல்ல முயற்சி. வேறு எந்த மாநிலத்திலாவது அப்படி அமைத்திருக்கிறார்களா? தமிழகத்தில் அந்த இன்ஸ்டிடியூட் எங்கு அமைய இருக்கிறது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, நான் முன்பே சொன்ன (Irrigation Management Training Institute) என்ற தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிறுவனம் மகாராஷ்டிரத்தில் அவுரங்காபாத்திலுள்ள நீர் மற்றும் நில நிர்வாகத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. 1984 ஏப்ரல் முதல் இந்தப் பயிற்சிக் கழகத்தைத் துவக்க நாம் முன் வந்திருக்கிறோம். சென்னையிலுள்ள தரமணியில் அந்தப் பயிற்சி நிறுவனம் தற்போது நிறுவப்பட்டாலும், இந்த நிறுவனத்தை சென்னை அல்லாத வேறு பகுதியில் மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது. பெரும்பாலும் திருச்சியை அதற்காகத் தேர்ந்தெடுக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, வீணாகின்ற தண்ணீரை தேக்கி வைக்கத் தஞ்சை மாவட்டத்திலே அணைகள் கட்ட வழியில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். குறிப்பாக காவிரி ஆற்றிலே இடைஇடையிலே பத்து இடங்களிலே தடுப்புகளை ஏற்படுத்தி, அந்தத் தண்ணீர் வேகமாகச் செல்லாமல் தடுப்புகளை ஏற்படுத்தி, பின்னால் அதைப் பயன்படுத்த வாய்ப்பு இருப்பதாக பொறியியல் வல்லுனர்கள் கருத்து தெரி

வித்திருக்கிறார்கள். குறிப்பாக கடைமடைப் பகுதியிலுள்ள அலங்கள் என்ற பகுதி திட்டாக, தண்ணீர் இல்லாமல் காய்ந்து கிடக்கிறது. அந்தப் பகுதியிலே தண்ணீரைத் தேக்கி வைத்து, பம்ப்செட் மூலமாக பாசனத்திற்குப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு அரசு செயற்குறிப்பைத் தயாரிக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இப்போது வெள்ளத் தடுப்புக்கு என்று தனியாக சிறப்பு தலைமைப் பொறியாளரை தமிழக அரசு நியமித்திருக்கிறது. அவர், தஞ்சையைத் தலைமையகமாகக் கொண்டு பணியாற்றுகிறார். அவரிடம் மாண்புமிகு உறுப்பினரவர்களின் யோசனையை எடுத்துச் சொல்லி, எவ்வளவு தூரத்திற்கு அது சாத்தியக்கூறானது என்பதைக் கண்டறிந்து, தேவைப்பட்டால் உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் (*) உடுக்குறி, அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. கவன ஈர்ப்பு.

தமிழாசிரியர்கட்கு தலைமையாசிரியர் பதவி வழங்காததால் தமிழாசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"தமிழாசிரியர்கட்கு தலைமையாசிரியர் பதவி வழங்க நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகும், உயர்நிலைப் பள்ளியிலும், மேல் நிலைப் பள்ளியிலும் வழங்கப்படுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காததனால் தகுதியுடைய தமிழாசிரியர்கள் நூற்றுக் கணக்கில் பாதிக்கப்படுவது குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 403-404 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.